# இலங்கையில் உள்ள இளைஞர்கள் தொழில்முனைவு திறன்களைப் பெற்றுக்கொள்வதற்காக சர்வதேச தொழிலாளர் தாபனம் மற்றும் இலங்கை வர்த்தக சம்மேளனம் ஆகியன புதியதோர் கூட்டாண்மையில் ஒன்றிணைகின்றன.

*இந்த ஒத்துழைப்பானது, இலங்கை மற்றும் நேபாளத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும், ஐக்கிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் நிதியளிக்கப்பட்ட சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் தெற்காசிய தலைமைத்துவத் தொழில்முனைவோர் திட்டத்தின் பல முக்கிய முன்னெடுப்புக்களில் ஒன்றாகும்.*

கொழும்பு, 2021 நவம்பர் 8 – 2018 ஆம் ஆய்வொன்றின்படி, இலங்கை இளைஞர்களில் 30%க்கும் குறைவானவர்கள் சுயதொழிலை சிறந்த தொழிலாக கருதுகின்றனர். இலங்கையில், ஒரு தொழில்முனைவோராக இருப்பது இன்னும் அதிக ஆபத்துள்ள, நிலையற்ற தேர்வாகவே பார்க்கப்படுகிறது. பெரும்பாலானோரின் விருப்பங்கள் பொதுத்துறையில் வேலைவாய்ப்பை நோக்கி சார்ந்துள்ளன. இவற்றின் விளைவு, 'உந்துதல்' காரணிகளால் குறிக்கப்பட்ட தொழில்முனைவு கலாசாரமாகும் - இவ்வகையான கலாசாரத்தில் தனிநபர்கள் ஒரு வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதற்கான நாட்டத்தை காட்டிலும், தேவையின் காரணமாக தொழில்முனைவை நோக்கி வலுக்கட்டாயமாக தள்ளப்படுகின்றனர்.

இதன் பிரதிபலிப்பாக, சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் தெற்காசிய தொழில்முனைவோர் தலைமைத்துவத் திட்டம் (SALE) தொழில் முனைவோர் உலகில் இளைஞர்களின் பிரவேசத்தை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் பல மூலோபாய தலையீடுகள் மூலம் தொழில் முனைவோர் சுற்றுச்சூழல் அமைப்பில் ஒரு மாற்றத்தை உருவாக்குகிறது. இவற்றில் ஒன்று, இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் இலங்கையில் உள்ள சர்வதேச தொழிலாளர் தாபனத்திற்கிடையிலான முக்கிய 2 வருட கூட்டாண்மை ஆகும், இது நாட்டின் இளைஞர்களிடையே தொழில்முனைவை

மேம்படுத்துவதற்கும், ஆர்வமுள்ள தொழில்முனைவோருக்கு மிகவும் சாதகமான சூழலை உருவாக்குவதற்குமாக இன்று ஆரம்பிக்கப்படுகின்றது. தெற்காசிய தொழில்முனைவோர் தலைமைத்துவத் (SALE) திட்டத்தின் சிறப்பம்சமாக, இளம் தொழில்முனைவோர் தங்கள் வணிக யோசனைகளை வெளிப்படுத்தவும், தேவையான ஆதரவைப் பெறவும், 'பிரகாசிக்கும் இளவயதுத் தொழில்முனைவாளர்' (YES) விருதை வெல்லுவதற்கான வாய்ப்பைப் பெறவும் ஒரு புதிய தேசிய போட்டியை அறிமுகப்படுத்தவுள்ளது.

"இலங்கை இன்னும் தொழில்முனைவில் முழு திறனையும் பயன்படுத்தவில்லை. இந்த நிலைமை புத்தாக்க யோசனைகளின் பற்றாக்குறை அல்லது இளைஞர்களிடையே உள்ள ஆர்வமின்மை காரணமாக அல்ல, மாறாக சிறந்த தொழில்முனைவோர் சூழல் அமைப்பு காணப்படாமையின் விளைவாகும்" என்று சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் (ILO) இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான வதிவிடப் பணிப்பாளர் சிம்ரின் சிங் கூறுகிறார். "கொவிட்-19" புத்தாக்கம் கொண்ட சிந்தனையின் அவசியத்தையும், புதிய வணிகத் தீர்வுகள் மற்றும் சேவைகளுக்கான துரித தேவையையும் குறிப்பாக டிஜிட்டல் பொருளாதாரத்தில் உள்ள வாய்ப்புகளையும் எடுத்துக்காட்டுகிறது. தொழில்முனைவினை முன்கொண்டு செல்வதற்காகஇ அனைத்துதரப்பினரிடையேயும் ஓர் மனநிலை மாற்றத்தினை உண்டுபண்ணவேண்டியுள்ளது. அதாவதுஇ இளைஞர்கள் தம்தேவைகளை அணுகிக்கொள்ளவும்இ வளங்களையும் திறன்களையும் பெற்றுக்கொள்ளவும் ஓர் மனநிலைசார்ந்த மாற்றமானது அனைத்து தரப்பினரிடையேயும் தேவைப்படுகின்றது" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் பொதுச் செயலாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மஞ்சுள டீ சில்வா, சர்வதேச தொழிலாளர் தாபனத்துடனான (ILO) கூட்டாண்மை பற்றி பேசுகையில், 'தொழில்முனைவைப் பொருளாதார வளர்ச்சியின் மிக முக்கியமான ஊக்கியாக கருதுகிறோம், ஏனெனில் இது மற்ற வளங்களைத் திரட்டி மதிப்பை உருவாக்குகிறது. இளைஞர்கள் மற்றும் அவர்களில். முக்கிய

செல்வாக்கு செலுத்துபவர்களான பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் தொழில்முனைவை ஊக்குவிப்பதன் மூலம் நீண்ட தூரம் பயணிக்கலாம். இந்நாட்டு இளைஞர்களுக்கு நிரந்தரமான நன்மைகளை வழங்கக்கூடிய இவ்வாறான ஒரு திட்டத்தில் ஒத்துழைப்பதில் இலங்கை வர்த்தக சம்மேளனம் மிகவும் மகிழ்ச்சியடைகிறது' என்று குறிப்பிட்டார்.

இளைஞர்களின் தொழில்முனைவை மேம்படுத்துவதற்கான முழுமையான அணுகுமுறையை மேற்கொள்வதன் மூலம், தெற்காசிய தொழில்முனைவோர் தலைமைத்துவத் (SALE) திட்டம் உயர் இரண்டாம் நிலைப் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலை கல்வி நிறுவனங்களில் தொழில்முனைவோர் பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்துகிறது, தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கேற்பாளர்களுக்கு சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் (ILO) முதன்மையான 'Start and Improve Your Buniess (SIYB) (உங்கள் வியாபாரத்ததை ஆரம்பித்து விருத்தி செய்யுங்கள்) பயிற்சியிலிருந்து பயனடைதல், தனியார் துறையிலிருந்து வழிகாட்டுதல், தேசிய பொருளாதாரத்தில் தொழில்முனைவோர் ஊக்குவிப்பு தாக்கங்கள் பற்றிய கொள்கை உரையாடல்கள் மற்றும் மன்றங்கள், மேலும் பரந்த பொது நன்மதிப்பு மற்றும் இளம் தொழில்முனைவோர்களுக்கு ஆதரவை மேம்படுத்துவதற்கு ஆலோசனை மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரங்களை செயல்படுத்துதல் ஆகியவற்றிற்கான வாய்ப்பை வழங்கவிருக்கின்றது.

"சனாதிபதி பைடன், 'நமது சிறு வணிகங்களை மீண்டும் கொண்டுவருவது நமது பொருளாதாரத்தை மீட்டெடுப்பதில் முக்கியமானதாகும்' என்று கூறினார். எனவே, அமெரிக்க அரசாங்கம் சிறு வணிக வளர்ச்சியை . தமது சொந்த மீட்சிக்கான திறவுகோலாக கவனம் செலுத்துகிறது. இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் சர்வதேச தொழிலாளர் தாபனத்துடன் இணைந்து குறிப்பாக பெண்கள், வரலாற்றுரீதியாக பின்தள்ளப்பட்டவர்கள் மற்றும் அனைத்துத் தரப்பினரையும் உள்வாங்குதல் மூலம் தொழில்முனைவினை ஊக்குவிப்பதனூடாக இலங்கையின் பொருளாதார வலுப்படுத்தலுக்கு பங்களிப்பதனையிட்டு – அமெரிக்க தூதரகம் மகிழ்வடைகின்றது" என்று கொழும்பிலுள்ள அமெரிக்காத் தூதரகத்தின் பொருளாதாரப் பிரிவின் தலைவர் பிலிப் லூஸ்லி தெரிவித்தார்.

தொழில்முனைவானது வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல் மற்றும் கண்ணியமான வேலைவாய்ப்புக்களுக்கான சாத்தியப்பாடுகளுக்கும் ஒருபடி மேற்சென்று, தற்போதைய நியமங்களை தகர்க்கின்றது, புதிய சிந்தனைகளை உட்புகுத்துகின்றது, தீர்வுகளை முன்வைக்கின்றது மற்றும் நிலைபேறான மாற்றத்திற்கு வழிவகுக்கின்றது. இவ்விணைவானது இளைஞர்களின் படைப்பாற்றல், அவர்களின் இயக்கம் மற்றும் திறன்களினை ஒன்றிணைப்பதனூடாக 2030ல்நிலைபேறான அபிவிருத்தியினை எய்துவதற்கான நிகழ்ச்சிநிரலிற்கான ஓர் வலிமையான சக்தியினை தோற்றுவிக்கின்றது.